Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Cr.P.C)

**IN THE COURT OF SC/ST Court, CUDDALORE**

**Sessions Case No. 34 of 2022**

Deposition of ....... witness for .................. Prosecution........**P.W. 11**

Defence

Court

| | |
|---|---|
| Name | சிந்து |
| Father name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | இந்து |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 16th day of September 2025.**

(G.SARASWATHI) Signature of the witness.

NAME OF THE JUDGE :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on **Tuesday the 16th day of September 2025.**

**1வது எதிரி ஆஜர். 2 வது எதிரிக்கு எதிராக குற்றம் நீக்கப்பட்டது.**

**முதல்விசாரணை** :

நான் பூண்டியாங்குப்பத்தில் குடியிருக்கிறேன். நான் சென்னை சரஸ்வதி வித்யாலாயா தனியார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 சுவாதி எனக்கு தெரியும். அவர் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் வன்னியர் வகுப்பை சேர்ந்தவர். கடந்த 2021 ல் வேலைக்கு செல்லும் பெண்கள் தங்கும் விடுதியான சென்னை வடபழனி G.M மகளிர் விடுதி என்கிற விடுதியில் நானும் அ .சா.1 சுவாதி யும் ஒன்றாக தங்கியிருந்தோம். நான் அந்த சமயம் பள்ளியில் வேலை செய்தேன் . அ.சா.1 சுவாதி நர்சாக வேலை செய்தார். அ.சா.1 சுவாதி எனக்கு அப்போது தோழியாக இருந்தார். விடுதிக்கு எதிரி வந்து அ.சா.1 சுவாதி யை அழைப்பார். அ.சா.1 சுவாதி அவருடன் செல்லுவார். இது குறித்து அ.சா.1 சுவாதி கேட்டபோது அவர்கள் இருவரும் காதலிப்பதாக கூறினார் . அ.சா.1 சுவாதி அவர்கள் இருவரும் ஒன்றாக எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை தனது கைபேசியில் இருந்து என்னிடம் காண்பித்தார். மே 2021 ல் எதிரி மகேஷ்குமார் தன் வீட்டிற்கு வந்ததாகவும் இருவரும் ஒன்றாக உடலுறவு கொண்டதாகவும் , அ.சா.1 சுவாதி என்னிடம் கூறியுள்ளார். அதன்பிறகு சாதியை காண்பித்து திருமணம் செய்துக்கொள்ள மாட்டேன் என எதிரி கூறியதாக என்னிடம் அ .சா.1 சுவாதி கூறினார். பிறகு அ.சா.1 சுவாதி காவல் நிலையத்தில் இது குறித்து புகார் கொடுத்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

எதிரி மகேஷ்குமார் அ.சா.1 சுவாதியை விடுதிக்கு வந்து அழைப்பார் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் . காவல்நிலையத்தில் அ.சா. 1 சுவாதி புகார் கொடுத்தவுடன் என்னை விசாரித்தார்கள். ஜுன் 2021 ல் அவ்வாறு விசாரித்தார்கள். நானும் சுவாதியும் நான்கரை வருடம் ஒன்றாக விடுதியில் வசித்தோம் . நான் முதல்விசாரணை

**சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் சுவாதி எனது தோழி என்ற காரணத்திற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை : இல்லை.**

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*

*Sessions Judge, Special Court for Trial of Cases under SC/ST (PoA) Act, (FAC)*
*Cuddalore.*